# “ஈரானை மிரட்டுவது பலனளிக்காது” ரஷ்யா!

## ரஷ்ய அதிபர் புதினை சந்திக்கிறார் ஈரான் வெளியுறவு அமைச்சர்!

ஈரான், ஏப். 28-

ஈரானை மிரட்டிப் பணியவைக்கும் முயற்சி பலனளிக்காது என அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரித் துள்ளது.

ஈரான், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டு வருவதில் இழுபறி நீடித்து வருகிறது. நேரடி போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகளுக்காக அமெரிக்கக் குழுவை அனுப்புவதை அதிபர் டிரம்ப் நிராகரித்து விட்டார். ஈரான் விரும்பினால் தங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம் என்றும் டிரம்ப் தெரிவித்துள்ளார். ஈரான் அணு ஆயுத நாடாக மாறுவதை ஏற்க முடியாது என்றும் டிரம்ப் கூறியுள்ளார்.

இந்நிலையில், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராச்சி, ஓமன் மற்றும் பாகிஸ்தான் பயணங்களை முடித்துக் கொண்டு ரஷ்யா சென்றுள்ளார். மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் புதினை சந்தித்து அராச்சி பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். போர்நிறுத்தம் மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய வெளியுறவுத்துறை அதிகாரி டிமிட்ரி பெஸ்கோவ், ஈரானை மிரட்டிப் பணியவைக்கும் அமெரிக்காவின் முயற்சி பலனளிக்காது என்றார். பிரச்சினைகளுக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கு ரஷ்யா அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

### மாநகராட்சிப் பள்ளிகளில்

# 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் சேர்க்கை!

சென்னை, ஏப். 28-

தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தல் 23ம் தேதி முடிந்துள்ள நிலையில், 2026-2027ம் ஆண்டுக்கான பள்ளி மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில், சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் வீடுவீடாக சென்று மாணவர் சேர்க்கை இயக்கத்தை தீவிரப்படுத்தி யுள்ளது. இதுவரையில் சுமார் 5000 க்கும் மேற்பட்ட புதிய குழந்தைகள் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், வரும் வாரங்களில் இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க மாநகராட்சிஅதிகாரிகள் இலக்கு வைத்துள்ளனர்.

ஏப்ரல் மாதத்தின் 3வது வாரம் வரையில் மாநகராட்சிப் பள்ளிகள் முழுவதும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த மாத இறுதிக்குள் சேர்க்கை எண்ணிக்கை 6 ஆயிரத்தை எட்டும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். அத்துடன் மே மாதத்துக்குள் இது 7 ஆயிரம் வரை அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு மாணவர் சேர்க்கையைவிட இந்த ஆண்டு மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்க முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

அதற்காக அந்தந்த பள்ளிகளின் முன்பாக பதாகைகள் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். மாநகராட்சியில் 206 தொடக்கப் பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 35 மேனிலைப் பள்ளிகள் என 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த பள்ளிகளில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். மேலும் 2025-2026ம் கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு காணப்பட்டது.

### தமிழ்நாடு – குஜராத் உள்ளிட்ட மாநிலங்கள்

# காற்றாலை மின் உற்பத்தியில் முன்னோடியாகத் திகழ்கின்றன!

## பிரதமர் மோடி தகவல்!

புதுடெல்லி, ஏப். 28-

‘காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம், குஜராத், மகாராஷ்டிரம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்கள் முன்னோடியாக திகழ்கின்றன’ என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இத்துறையில் இந்தியா மிகப் பெரிய மைல்கல்லை எட்டியுள்ளது. நாட்டின் காற்றாலை மின் உற்பத்தித் திறன் 56 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்தார். பிரதமர் மோடி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமையன்று மனதின் குரல் (மன் கீ பாத்) வானொலி நிகழ்ச்சி வாயிலாக நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார். அதன்படி, 133ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி ஞாயிற்றுக் கிழமை (ஏப்.26) ஒலிபரப்பானது.

பிரதமரின் உரை வருமாறு: ஆற்றல் என்பது முழுமையின் சக்தி. அந்த ஆற்றல்தான், இப்போது நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் புதிய அத்தியாயத்தை எழுதிக் கொண்டிருக்கிறது.

காற்றாலை மின் உற்பத்தியில், அண்மையில் மிகப் பெரிய மைல் கல் எட்டப்பட்டது. அதாவது, நாட்டின் காற்றாலை மின் உற்பத்தித் திறன் 56 ஜிகாவாட்டுக் கும் மேல் உயர்ந்துள்ளது. கடந்த ஓராண்டில் 6 ஜிகாவாட் மின் உற்பத்தி திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கு சூரிய மின் உற்பத்தியும், காற்றாலை மின் உற்பத்தியும் இன்றியமையாதவை. இது வெறும் சுற்றுச்சூழல் சார்ந்தது மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது.

காற்றாலை மின் உற்பத்தித் திறனில், இந்தியா உலக அளவில் 4 ஆவது இடத்தில் உள்ளது. இது நமது பொறியாளர்களின் கடின உழைப்பு, இளைஞர்களின் விடா முயற்சி, தேசத்தின் கூட்டு உறுதிப்பாட்டின் அடையாளம்.

தமிழகம், குஜராத், மகாராஷ் டிரம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்கள், இத்துறையில் முன்னோடியாகத் திகழ்கின்றன. ஒரு காலத்தில் பாலைவனம் மட்டுமே காணப்பட்ட குஜராத்தின் கட்ச், பதான், பனாஸ்கந்தா போன்ற பகுதிகளில் இப்போது மாபெரும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்காக்கள் உருவாகி வருகின்றன. இதனால் இளைஞர்கள் பயனடைகின்றனர். புதிய வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.

### ஈரானுடனான பேச்சுவார்த்தைக்காக

# பாகிஸ்தான் செல்லவிருந்த அமெரிக்கக் குழுவின் பயணம் ரத்து!

## அமெரிக்க அதிபர் டிரம்ப் உத்தரவு!

வாஷிங்டன், ஏப்.28-

அமெரிக்கா - ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமலில் உள்ள நிலையில் இரு நாடுகளும் 2-வது கட்ட அமைதி பேச்சுவார்த்தையை இதுவரை தொடங்கவில்லை.

இரு நாடுகள் இடையே கடந்த 11-ஆம் தேதி பாகிஸ்தானில் நடந்த முதல் கட்ட பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.

இதற்கிடையே பாகிஸ்தான் 2 நாடுகளுக்கு இடையே மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்க மத்தியஸ்த பணியில் ஈடுபட்டது. அதன்படி ஈரான் வெளியுறவுத்துறை மந்திரி அப்பாஸ் அராக்சி தலைமையிலான குழு பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டது.

இந்த குழுவினர் அமெரிக்காவுடன் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அமெரிக்க குழுவை சந்திக்காமலேயே ஈரான் குழு பாகிஸ்தானில் இருந்து வெளியேறியது.

இதற்கிடையே பாகிஸ்தான் செல்ல இருந்த அமெரிக்காவின் குழுவை அதிபர் டிரம்ப் ரத்து செய்து உள்ளார். ஈரான் குழுவினர் பாகிஸ்தானில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு செல்ல இருந்த அதிகாரிகளின் பயணத்தை டிரம்ப் ரத்து செய்தார்.

இது தொடர்பாக டிரம்ப் தனது சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவ் விட்காப் மற்றும் ஜேரட் குஷ்னர் ஆகியோரை பாகிஸ்தான் பயணிக்க வேண்டாம் என்று தெரிவித்து விட்டேன். தற்போது ஈரான் கையில்தான் முடிவு இருக்கிறது. அவர்கள் பேச விரும்பினால் எங்களை அழைக்கலாம்.

ஈரான் ஒரு ஏற்புடைய அமைதி திட்டத்தை முன்வைக்க தவறியதால் அமெரிக்க குழுவினர் பயணம் ரத்து செய்யப்பட்டு உள்ளது. ஈரான் நிறைய முன்மொழிந்து இருந்தாலும் அது போதுமானதாக இல்லை. அணு ஆயுதத்தை வைத்திருக்காது என்பதை ஈரான் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு டிரம்ப் அதில் கூறியுள்ளார்.

ஈரானின் உயர்மட்ட குழு பாகிஸ்தானில் இருந்து வெளியேறியதாலும், அமெரிக்க குழு பாகிஸ்தான் பயணத்தை ரத்து செய்ததாலும், அமெரிக்கா - ஈரான் இடையேயான போர் நிறுத்த முயற்சிகள் தோல்வி அடைந்தன.’

### திருவண்ணாமலை மாவட்ட இலக்கிய அணித் தலைவர் – மூத்த முன்னோடி

# கீழ்பெண்ணாத்தூர் க.பன்னீர்செல்வம் மறைவு!

## பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி – கழக முன்னணியினர் அஞ்சலி!

திருவண்ணாமலை, ஏப். 28 -

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்ப்பெண்ணாத்தூரைச் சேர்ந்த மூத்த கழகத் தோழர் க.பன்னீர் செல்வம் (வயது 62 ) அவர்கள் நேற்று முன்தினம் (26.04. 2026) இரவு பத்தரை மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவருக்கு கண்ணகி என்ற மனைவியும், தமிழ் காவியா என்கிற மகளும் உள்ளனர்.

அவரது உடலுக்கு சட்ட பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மு.க.மு. அறிவு நிதி, தலைமைக் கழக செய்தி தொடர்பாளர் தமிழ்தாசன், செஞ்சி சட்ட மன்ற உறுப்பினர் மஸ்தான், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் நெடுஞ்செழியன், துரிஞ்சா புரம் அண்ணாமலை, கீழ் பெண்ணாத்தூர் ஆரஞ்சி ஆறுமுகம், இராஜேந்திரன், கழக நிர்வாகிகள், பொது மக்கள் என பலர் அஞ்சலி செலுத்தினர். அவரது உடல் நேற்று (27.04.2026) மாலை 4.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



அவர் மாணவரணி, இளைஞர் அணி, ஒன்றியக் கழகத் துணைச் செயலாளர், பேரூர் மன்றத் துணைத் தலைவர் என பல்வேறு பொறுப்பில் இருந்தும்; தற்போது மாவட்டக் கழக இலக்கிய அணித் தலைவராகவும் இருந்தும் செயல்பட்டு வந்தவர்.

ஒரு வாரம் உடல் நலம் குன்றியிருந்த அவர்; சென்னை அப்போலோ மருத்துவமனை மற்றும் வேலூர் நறுவி எனும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இரவு இயற்கை எய்தினார்.

1980 களில் சென்னை மாநிலக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே அவர் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டக் களத்தில் கலந்து கொண்டு சிறைக்கு சென்றவர். அவருடைய தந்தையார் கண்ணன் அவர்கள் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் காலத்தில் வட்டாரச் செயலாளர், கீழ்ப்பெண்ணாத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர், சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் பேரூர்க் கழகச் செயலாளராக இருந்து பணியாற்றியவர். இவரின் தம்பி “அன்பு” என்பவர் தற்போது கீழ்ப்பெண்ணாத்தூர் பேரூர்க் கழகச் செயலாளராக இருந்து பணியாற்றி வருகிறார்.

மறைந்த பன்னீர்செல்வம் சுயமரியாதை வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர் . இவர் ஆதி திராவிடக் குடும்பப் பெண்ணைத் திருமணம் செய்து, ஒரு மகள் பெற்று வாழ்ந்து கொண்டிருந்தவர். தற்போது அவருடைய மகள் முதுநிலை மருத்துவராக மூன்றாம் ஆண்டு வேலூர் அரசு மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறார் . அவருடைய துணைவியார் கண்ணகி என்பவர் தமிழ்நாடு அரசு வேளாண் துறையில் உதவி இயக்குனராகப் பணிபுரிந்து வருகிறார். பன்னீர்செல்வம் கழகத் தலைவருக்கு நன்கு அறிமுகமானவர்.

### கீழ்பெண்ணாத்தூர்

## க.பன்னீர்செல்வம் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 28-

திருவண்ணாமலை மாவட்டக் கழக இலக்கிய அணித் தலைவரும், கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி முன்னாள் தலைவரும் கழக முன்னணித் தோழருமான க.பன்னீர்செல்வம் அவர்கள் (வயது 62) நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொண்டுள்ளார்.

### இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிலுவைத் தொகை வழங்காததைக் கண்டித்து

# எல்.பி.ஜி. டேங்கர் லாரிகள் வேலைநிறுத்தம்!

## சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

நாமக்கல், ஏப். 28-

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் வாடகை நிலுவைத் தொகையை வழங்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து தென்மண்டல எல்.பி.ஜி டேங்கர் லாரி உரிமையாளர்கள் நேற்று முதல் வேலை நிறுத்தம் அறிவித்துள்ளனர். தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட தென் மாநிலங்களில் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

வாடகை நிலுவைத் தொகை நிறுத்தி வைக்கப் பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு இயக்கப்படும் 2000 டேங்கர் லாரிகள் நிறுத்தப் படுவதாக, தென் மண்டல எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

தென் மண்டல எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் சுந்தர்ராஜன் நாமக்கலில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம், தென்மண்டல எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டிய பல கோடி ரூபாய் வாடகை நிலுவைத் தொகையை நிறுத்தி வைத்துள்ளதாக தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு இயக்கப்படும் எல்.பி.ஜி. டேங்கர் லாரிகள் 2000 லாரிகள் லோடுகள் ஏற்றாமல் நிறுத்தப்படும் என சுந்தர்ராஜன் அறிவித்தார். வேலை நிறுத்தம் காரணமாக தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களில், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் எரிவாயு சிலிண்டர்கள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# தென்மேற்குப் பருவமழை முன்கூட்டியே தொடங்கும்!

சென்னை, ஏப். 28-

வங்கக் கடல் மற்றும் அரபிக் கடல் பகுதிகளில் தற்போது காற்று இரு காற்று சுழற்சி உருவாக உள்ள நிலையில் படிப்படியாக வெப்பம் குறைந்து இரவு நேரங்களில் மழை பெய்வதற்கான சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளது. அதன் தொடர்ச்சியாக தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் வறண்ட வானிலை நிலவும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மாவட்டங்களில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது. இது 28ம் தேதி வரை நீடிக்கும். அதற்கு பிறகு கர்நாடகா, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மேலும் மழை பெய்யும் வாய்ப்புள்ளது. மே மாதம் 1ம் தேதியும் சில இடங்களில் பெய்யும். இந்நிலையில், லட்சத்தீவு, மாலத்தீவு இடையே ஒரு காற்று சுழற்சி உருவாகி கேரள கடற்கரைக்கு நகர்ந்து வரும். அதன் காரணமாக கேரளா மற்றும் தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் மழை பெய்யும்.

மே 5ம் தேதிக்கு பிறகு தமிழகத்தின் டெல்டாவிலும் தென் கடலோரத்திலும் உள் பகுதியிலும் தீவிரம் அடைந்து பெய்யும். 6,7, 8ம் தேதிகளில் வட கடலோரத்தில் மழை பெய்யும். விழுப்புரம் சென்னை காஞ்சிபுரம், மாவட்டங்களிலும் மழை பெய்யும். அப்போது தென் மாவட்டங்களிலும் கோடை மழை தென்மேற்கு பருவமழை போல பெய்யும். மேற்கு தொடர் மலை மாவட்டங்களில் நீர்த் தேக்கங்கள் நிரம்பும் அளவுக்கு பெய்யும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. மே மாதம் 4ம் தேதி தொடங்கும் அக்னி நட்சத்திரம் வெப்பம் தெரியாத அளவுக்கு மழை பெய்யும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

# சென்னையில் வெயிலின் தாக்கம் அதிகரிப்பு!

## பொதுமக்கள் தவிப்பு!

சென்னை, ஏப். 28-

அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்பே சென்னைவாசிகளை வெயில் வாட்டி எடுத்து வருகிறது. நேற்று முன்தினம் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் காலை நேரத்தில் மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கினர். மாலை நேரத்தில் பூங்கா, கடற்கரையில் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது. தமிழகம் முழுவதும் கடந்த பிப்ரவரி மாதம் இறுதியில் இருந்து வெயில் வாட்டி எடுத்து வருகிறது. தொடர்ந்து மார்ச், ஏப்ரல் (இம்மாதம்) வெயிலின் தாக்கம் மேலும் அதிகரித்தது. குறிப்பாக இந்த மாதம் பல மாவட்டங்களில் வெயில் சதத்தை கடந்தது.

இதனால், மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். வெயிலின் தாக்கத்தால் மக்கள் காலை 11 மணிக்கு மேல் தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்க தொடங்கினர். வீடுகளிலேயே முடங்கிய காட்சியை காண முடிந்தது. தப்பி தவறி வெளியே சென்றவர்கள் சிறிது தூரம் நடப்பதற்குள் உடம்பு முழுவதும் வியர்த்து சட்டை முழுவதும் ஈரமானது. வெயிலின் உக்கிரத்தால் மயக்கம் வரும் நிலையை உணர முடிந்தது. வாகனங்களில் சென்றவர்கள் கடும் சிரமத்திற்கு ஆளானார்கள் என்று தான் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு வாகனங்களில் அனல் கக்கியது.

**கத்திரி வெயில்**

**மே.4 ஆம் தேதி தொடக்கம்!**

இந்த நிலையில் வெயிலின் உக்கிரம் என்று அழைக்கப்படுகின்ற கத்தரி வெயில் வருகிற 4ம் தேதி தொடங்க உள்ளது. கத்திரி வெயில் தொடங்க இன்னும் குறுகிய நாட்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் வெயில் தாக்கம் அதிகரிக்க தொடங்கியுள்ளது. சென்னையை பொறுத்தவரை நேற்று முன்தினம் காலை முதல் வெயில் வாட்டி எடுக்கத் தொடங்கியது. காலை 8 மணிக்கே வெயில் சுள்ளென்று அடிக்க தொடங்கியது. 11 மணிக்கு மேல் வெளியில் செல்ல முடியாத அளவுக்கு வெயில் சுட்டெரிக்க தொடங்கியது.

இதனால், மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கினர். பிற்பகல் வேளையில் சென்னையின் இதய பகுதியாக விளங்கும் அண்ணா சாலையில் மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்பட்டது. வாகனங்களில் எண்ணிக்கையும் குறைந்து காணப்பட்டது. அது மட்டுமல்லாமல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் வேறு. அனைவரும் வீட்டில் இருந்தனர். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியும், வெயிலின் தாக்கத்தில் இருந்து வீடுபட்டு இயற்கை காற்றை சுவாசிக்கவும் சென்னை மெரினா, பெசன்ட்நகர் கடற்கரை உள்ளிட்ட கடற்கரை பகுதியை நோக்கி மக்கள் படையெடுக்க தொடங்கினர்.

**கடற்கரை பூங்காக்களில்**

**பொதுமக்கள் தஞ்சம்!**

இதனால், மாலை 4 மணி முதல் கடற்கரை பகுதிகளில் மக்கள் கூட்டம் அதிகரிக்க தொடங்கியது. மாலை 6 மணிக்கு மேல் எங்கு பார்த்தாலும் மக்கள் தலைகளாக கடற்கரை பகுதிகள் காட்சியளித்தன. குடும்பத்துடன் வந்து கடற்கரை பகுதியில் மக்கள் பொழுதை போக்குகின்றனர். இதே போல சென்னையில் உள்ள சிறிய பூங்காக்கள் முதல் பெரிய பூங்காக்கள் வரை மக்கள் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக காணப்பட்டது.

**தேவையின்றி வெளியே**

**செல்ல வேண்டாம்!**

சாலையோரங்களில் தர்பூசணி, கிர்ணி பழம், சாத்துக்குடி, வெள்ளரிக்காய், இளநீர் போன்றவை விற்பனைக்காக குவித்து வைக்கப் பட்டுள்ளன. அவற்றை பொதுமக்கள் தேர்வு செய்து வாங்கி செல்லும் காட்சியை காண முடிந்தது.

இதே போல எலுமிச்சை சர்பத், கிர்ணிப்பழம், மாதுளம்பழம், ஆரஞ்ச் பழம் உள்ளிட்ட பழங்கள் ஜூஸ் விற்பனையும் அதிகரித்து காணப்பட்டது. வரும் நாட்களில் இன்னும் வெயில் அதிகரிக்கும் என்பதால் தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டுக்குள் பயணிப்பதற்கான

# உள்ளூர் விமானக் கட்டணம் பல மடங்கு உயர்வு!

## பயணிகள் அதிர்ச்சி!

சென்னை, ஏப். 28-

தமிழ்நாட்டுக்குள் பயணிப்பதற்கான உள்ளூர் விமானக் கட்டணம் பல மடங்கு உயர்ந்துள்ளதால் விமான பயணிகள் அதிர்ச்சி அடைந்தனர். தமிழக சட்டமன்றத் தேர்தலுக்காக சொந்த ஊர் சென்றவர்கள் விமானங்களில் சென்னை திரும்பி வருகின்றனர். விமானங்களில் பயணம் செய்வோருக்கு விமான கட்டணம் பல மடங்காக உயர்ந்துள்ளதால் பொது மக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். இருந்தாலும் விமானங்களில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. இதனால் பயண கட்டணங்களை விமான நிறுவனங்கள் நேற்று முன்தினம் இரவு முதல் உயர்த்தியுள்ளது.

இதன்படி உயர்த்தப்பட்ட கட்டண விவரங்கள்; தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு ரூ.5354 ஆக இருந்த விமான கட்டணம் நேற்றிரவு முதல் ரூ.17,089 ஆக உயர்ந்துள்ளது. மதுரையில் இருந்து சென்னைக்கு ரூ.5099 ஆக இருந்த விமான கட்டணம் நேற்றிரவு முதல் ரூ.32,508 ஆக உயர்ந்துள்ளது. திருச்சியில் இருந்து சென்னைக்கு ரூ.4,551 ஆக இருந்த விமான கட்டணம் நேற்று முன்தினம் இரவு முதல் ரூ.14,310 ஆக உயர்ந்துள்ளது. கோவையில் இருந்து சென்னைக்கு ரூ.4,634ஆக இருந்த விமான கட்டணம் நேற்று முன்தினம் இரவு முதல் ரூ.11,149ஆக உயர்ந்துள்ளது.